கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்

**முன்னிலை : திரு.S.சாது சிவசுப்பிரமணியன், B.A., B.L.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் வருடம் ஜுன் மாதம் 22ம் தேதி திங்கட்கிழமை
இடைநிலை மனு எண்.8/2025
இன்
அசல் வழக்கு எண்.120/2020
* * * *

R. இந்திராணி ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

A.செல்வச்சந்திரன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 10.06.2026–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முத்துகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.நமச்சிவாயம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிற்கும் வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கின் சொத்து விவரத்தின் நான்குமால் விபரத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டி இம்மனுவானது மனுதாரர்/வாதியால் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–</u>**

1.1) மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்நிர் இடையீட்டு மனுவில், தாவாச்சொத்தானது இந்நிர் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட நிலையில், தாவாச்சொத்திற்கு இந்நிர் மனுதாரர்/வாதியின் பெயரில் வருவாய்துறையினரால் பட்டா வழங்கப்பட்டது என்றும், இந்நிர் மனுதாரர்/வாதியின் பெயருக்கு வருவாய் துறையால் வழங்கப்பட்ட பிளாட் எண்.4க்கு நீள மற்றும் அகல அளவுகள் குறிப்பிட்டு வழங்கப்பட்டது என்றும், இந்நிலையில், மேற்படி நீள மற்றும் அகல அளவுகளை அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டபோது குறிப்பிடாமல் விடுபட்டுபோய்விட்டது என்றும், மேற்படி தாவாச்சொத்தானது வீட்டடி மனை என்பதால் மேற்படி நீள மற்றும் அகல அளவுகள் குறிப்பிடவேண்டியது அவசியம் என்றும், ஆனால் இந்நிர் மனுதாரர்/வாதியின் வழக்கறிஞர் மேற்படி அளவுகளை அசல்

வழக்கானது தாக்கல் செய்தபோது குறிப்பிடாமல் விடுபட்டுவிட்டதனை இந்நிர் மனுதாரர்/வாதியும் கவனிக்காமல் விட்டுவிட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

1.2) மேலும், ஒரு அசையா சொத்தை பொறுத்து வழக்கில் சொத்தின் அடையாளம் காணும்விதமாக சொத்து விபரங்கள் மற்றும் நீள மற்றும் அகல அளவுகள் முறையாக குறிப்பிடவேண்டும் என்று சட்டநடைமுறையாகும் என்றும், மேலும், இந்நிர் மனுவின் அடிப்படையில் திருத்தல் செய்யக்கோரும் மனுவினை அனுமதிப்பதால் வழக்கின் தன்மையை மாற்றும்விதமாகவோ, புதிய சங்கதிகளை சேர்க்கும்விதமாகவோ எவ்வித திருத்தம் கோரப்படவில்லை என்றும், எனவே, இந்நிர் இடையீட்டு மனுவினை அனுமதிக்கவேண்டும் என்றும் மனுதாரர்/வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

2.1) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்/வாதி தரப்பு இந்நிர் இடைநிலை மனுவினை அனுமதிக்கக்கூடாது என்றும், அசல் வழக்கில் நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில், வருவாய் பதிவுகளின் அடிப்படையில், வழக்கு சொத்தை அளவிட முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றும், மேலும், மேற்படி

நீதிமன்ற ஆணையர் தயாரித்த வரைபடத்திலும் வழக்கு சொத்தின் அளவுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும், வழக்கு சொத்தின் அளவுகள் குறிப்பிடப்படாத நிலையில், மனுதாரர்/வாதி இந்நிர் சீர்திருத்த மனுவில் எதன் அடிப்படையில் புதிய அளவுகளை குறிப்பிட்டுள்ளார் என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) மேலும், சொத்து விவரத்தில் செய்யப்பட்டவேண்டிய சீர்திருத்தமாக குறிப்பிடப்படும் சொத்தின் அளவுகளுக்கு சட்டப்படியாக தேவையான ஆவணங்களை மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்து அதன் அடிப்படையிலேயே மேற்படி சீர்திருத்தங்களை செய்யவேண்டும் என்றும், மேலும், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்நிர் சீர்திருத்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் யாவும் கற்பனையாகவும், மனுதாரரின் விருப்பத்திற்கேற்ப தகுந்தப்படியும் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், வழக்கில் உள்ள குறைகளை சரிசெய்யும் நோக்கில் இந்நிர் இடையீட்டு மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே, இந்நிர் இடைநிலை மனுவினை அனுமதிக்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

**<u>3. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

3.1) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இந்நிர் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிர் இடைநிலை மனுவானது அசல் வழக்கின் சொத்து விவரத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) மனுதாரர்/வாதியின் இந்நிர் இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள சீர்திருத்தம் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கையில், அசல் வழக்கானது இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி கடந்த 2020ம் ஆண்டு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.3) இந்நிலையில், அசல் வழக்கு சொத்து விவரத்தின், நான்குமால் விபரத்தில், "மேற்கே : மகாலிங்கம் வீடு என்பதற்கு அடுத்த வரியில் **"கிழமேலடி வடபுறம் 7.4 மீட்டர், தென்புறம் 7.4 மீட்டர்,**

**தென்வடலடி கீழ்புறம் 7.0 மீட்டர், மேல்புறம் 7.4 மீட்டர்"** என்று திருத்தம் செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.4) இந்நிலையில், ஒரு அசையா சொத்தை பொறுத்து வழக்கில் சொத்தின் அடையாளம் காணும்விதமாக சொத்து விபரங்கள் மற்றும் நீள மற்றும் அகல அளவுகள் முறையாக குறிப்பிடவேண்டும் என்று சட்டநடைமுறையாகும் என்று மனுதாரர்/வாதி தரப்பில் குறிப்பிட்டுள்ளதை கருத்தில்கொண்டும், மேலும், இந்நிர் மனுவின் அடிப்படையில் திருத்தல் செய்யக்கோரும் மனுவினை அனுமதிப்பதால் வழக்கின் தன்மையை மாற்றும்விதமாகவோ, புதிய சங்கதிகளை சேர்க்கும்விதமாகவோ எவ்வித திருத்தம் கோரப்படவில்லை என்பதை குறிப்பிட்டுள்ள சங்கதியினை கருத்தில்கொண்டும், மேற்படி சீர்திருத்த மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தத்தினை அசல் வழக்கின் பிராது சொத்து விவரத்தின் நான்குமால் விபரத்தில் செய்யும்பட்சத்தில் தரப்பினர்களுக்கு எவருக்கும் பாதகமோ சாதகமோ ஏற்படாது என்பதை கருத்தில்கொண்டும், தரப்பினர்களுக்கு இடையே பல வழக்குகள் தாக்கல் செய்வதை தவிர்க்கும்விதமாகவும் மேற்படி சீர்திருத்தமானது அவசியமானது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், மேற்படி சீர்திருத்தங்களானது அவசியமானது மற்றும் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும், எனவே, மனுதாரர்/வாதியின் மனுவில்

குறிப்பிட்டுள்ள மேற்படி சீர்திருத்தங்கள் செய்வது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 22ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.06.22 18:45:58 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**<u>இணைப்பு: –</u>**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.06.22 18:46:08 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.8/2025
இன்
அசல் வழக்கு எண்.120/2020
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 22.06.2026